RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 75 | மார்ச்.24 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# நாட்டில் 53 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது : மக்களவையில் பிரதமர் மோடி தகவல்

புது டெல்லி: மார்ச்.24-

மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில், இந்தியாவில் 53 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளதாகவும், 41 நாடுகளில் இருந்து இந்தியா எரிபொருள் இறக்குமதியில் ஈடுபடுவதாகவும் மக்களவையில் பிரதமர் மோடி கூறினார்.

மேற்கு ஆசியாவில் ஏற்பட்டு வரும் பதற்றம் குறித்தும், அதனால் நமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்தும், அதைப் போக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில் இன்று உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர், "கடந்த பத்தாண்டுகளில், நெருக்கடி காலங்களுக்காக கச்சா எண்ணெயைச் சேமித்து வைப்பதற்கு இந்தியா முன்னுரிமை அளித்துள்ளது. இன்று, இந்தியா வசம் 53 லட்சம் மெட்ரிக் டன்களுக்கும் அதிகமான கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது. மேலும், இதை 65 லட்சம் மெட்ரிக் டன்களாக உயர்த்த பணிகள் நடைபெற்று வருகின்றன.



கடந்த 11 ஆண்டுகளில் எரிபொருள் இறக்குமதி ஆதாரங்களைப் பன்முகப்படுத்துவதன் மூலம், இந்தியா தனது பாதிப்புக்குள்ளாகும் தன்மையைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னதாக, நாம் 27 நாடுகளில் இருந்து எரிபொருள்களை இறக்குமதி செய்து வந்தோம். ஆனால் இன்று 41 நாடுகளில் இருந்து எரிபொருள்களை இறக்குமதி செய்கிறோம். கடந்த பத்தாண்டுகளில், கச்சா எண்ணெய் சேமிப்பிற்கு நாங்கள் முன்னுரிமை அளித்துள்ளோம். அதனால் நம்மிடம் இப்போது பெரியளவில் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது.

மேலும், நமது சுத்திகரிப்புத் திறனும் தற்போது அதிகரித்துள்ளது. சீரான விநியோகத்தைப் பராமரிக்க இந்தியா உலகளாவிய கூட்டாளிகளுடன் தொடர்ந்து இணைந்து செயல்பட்டு வருகிறது. நாங்கள் பல நாடுகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். எரிவாயு மற்றும் எண்ணெய் தேவைகளின் சீரான விநியோகத்தை உறுதிப்படுத்த எங்களால் முடிந்தவரை முயற்சித்து வருகிறோம்.

இருப்பினும், அப்பகுதியில் நிலவும் சூழ்நிலையால் அபாயங்களும் ஏற்படுகின்றன. கச்சா எண்ணெய், எரிவாயு, உரம் மற்றும் பல எரிபொருள் இறக்குமதியின் பெரும் பகுதி ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே வருகிறது. இந்த வழித்தடம் தடுக்கப்பட்டிருந்த போதிலும், நமது தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை நாங்கள் உறுதிசெய்து வருகிறோம்.

நாங்கள் 60 சதவிகிதம் எல்பிஜியை இறக்குமதி செய்கிறோம். ஆனாலும், வீட்டுத் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளோம்" என்று அவர் கூறினார்.

## பெரம்பூரில் பிரச்சாரம் தொடங்குகிறார் விஜய்

சென்னை: மார்ச்.24-

பெரம்பூரில் தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தை தொடங்கவுள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

தமிழக சட்டப் பேரவை தேர்தலில் தவெக தனித்து போட்டியிடும் சூழலில் 100 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்வு முடிந்து விட்டதாக கூறப்படுகிறது.

அக்கட்சியின் தலைவர் விஜய் வரும் 25 அல்லது 26ம் தேதிகளில் பெரம்பூரில் நடக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று பிரச்சாரத்தை தொடங்குவதாக தகவல் வெளியாகி உள்ளது.



## “இனியும் திமுகவின் ஏவல்துறையாக காவல்துறை செயல்படக் கூடாது”: நயினார் நாகேந்திரன்

சென்னை: மார்ச்.24-

இனியும் ஏவல் துறையாக இல்லாமல், திருநெல்வேலி விவசாயி கொலை வழக்கில் காவல்துறை உரிய நடவடிக்கை எடுத்து சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும் என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்: "திருநெல்வேலி மாவட்டம் மூன்றடைப்புப் பகுதியில் பட்டியலின விவசாயி ஆறுமுகம் கொலை செய்யப்பட்டு ஆறு நாட்களாகியும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாத விரக்தியில் அவரது மகள் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக வெளிவந்துள்ள செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

கொலை செய்த குற்றவாளிகளைக் கண்டுபிடிக்காமல் காவல்துறை மெத்தனமாகச் செயல்பட்டதால், இன்று மேலும் ஒரு அப்பாவி உயிர் பலியாகியுள்ளது. திறனற்ற திமுக ஆட்சியில் கடந்த ஐந்தாண்டுகளாகக் குற்றங்கள் பெருகிய போதெல்லாம் வேடிக்கை பார்த்த கொடூரம் போதாதென்று, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த பின்பும், வேடிக்கை பார்க்கிறதா தமிழகக் காவல்துறை?

இன்னும் 30 நாட்களில் இருந்த இடம் தெரியாமல் திமுக அரசைத் தமிழக மக்கள் தூக்கியெறியவுள்ள நிலையில், இனியும் ஏவல் துறையாகச் செயல்படாது, தமிழகக் காவல்துறை உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்! சட்டம் ஒழுங்கை உறுதி செய்ய வேண்டும்! " என்று நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

## “திமுக ஆட்சி தொடர்ந்தால் இமாச்சலப் பிரதேச நிலைதான் தமிழகத்துக்கும் ஏற்படும்”: அன்புமணி

சென்னை: மார்ச்.24-

திமுக ஆட்சி நீடித்தால் அடுத்த சில ஆண்டுகளில் இமாச்சலப் பிரதேச அரசு போல் தமிழ்நாட்டிலும் அரசு ஊழியர்களின் மாத ஊதியத்தை 30 % முதல் 50 % வரை குறைக்க வேண்டியிருக்கும் என்று பாமக தலைவர் அன்புமணி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "இமாச்சலப் பிரதேசத்தில் நிலவும் மிகக் கடுமையான நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி, அம்மாநில அரசு ஊழியர்களுக்கு 30 % வரையிலும், முதல்வருக்கும், அமைச்சர்களுக்கும் 30 முதல் 50 % வரையிலும் ஊதியம் தற்காலிகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மாநிலத்தின் நிதி மேலாண்மை மிக மோசமாக இருந்தால், அந்த மாநிலத்தில் என்னென்ன சீரழிவுகள் ஏற்படும் என்பதற்கு இமாச்சலப் பிரதேச அரசின் நிலை தான் சான்று ஆகும்.

2026 27ம் ஆண்டுக்கான இமாச்சலப் பிரதேச அரசின் நிதிநிலை அறிக்கையை அம்மாநில சட்டப்பேரவையில் முதல்வர் சுக்விந்தர் சிங் சுக்கு தாக்கல் செய்தார். வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கையின் மதிப்பு 6 % முதல் 8 % உயர்த்தப்படும் நிலையில், இமாச்சலப் பிரதேச அரசு நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி நிதிநிலை அறிக்கை மதிப்பை 6.12% குறைத்திருக்கிறது. கடந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை மதிப்பு ரூ.58,514 கோடியாக இருந்த நிலையில், நடப்பாண்டில் அது ரூ.54,928 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமின்றி, நிதி நெருக்கடி காரணமாக அடுத்த 6 மாதங்களுக்கு அம்மாநில முதல்வரின் ஊதியம் 50%, அமைச்சர்களின் ஊதியம் 30%, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 20% வீதம் குறைக்கப்படும்;



அதிகாரிகளில் தலைமைச் செயலாளர், செயலாளர்கள், காவல்துறை தலைமை இயக்குனர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகளின் ஊதியம் 30%, காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் அதற்கும் கீழ் நிலையில் உள்ள அதிகாரிகளின் ஊதியம் 20% குறைக்கப்படும்; அனைவருக்கும் வழங்கப்படும் 3% ஆண்டு ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடைநிலை ஊழியர்களுக்கு மட்டும் ஊதியக் குறைப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. குறைக்கப்படும் ஊதியம் எப்போது மீண்டும் வழங்கப்படும் என்பது குறித்து அறிவிக்கப் படவில்லை. இமாச்சலப் பிரதேச அரசு ஊழியர்களுக்கு இது தாங்க முடியாத பேரிடியாக அமைந்திருக்கிறது. இமாச்சலப் பிரதேச அரசு கடந்த இரு ஆண்டுகளாகவே அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க நிதியில்லாமல் தடுமாறி வந்தது. பல மாதங்கள் மிகவும் தாமதமாகத் தான் ஊதியம் வழங்கப்பட்டது. இந்த நிலைக்குக் காரணம் அம்மாநில அரசின் மிக மோசமான நிதி மேலாண்மை தான். அரசின் வருமானத்தைப் பெருக்குவதற்கு ஆக்கப்பூர்வமாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத ஆட்சியாளர்கள், செலவை மட்டும் அதிகரித்ததன் விளைவு தான் இது.

இமாச்சலப் பிரதேச அரசின் நிதிநிலை எந்த அளவுக்கு மோசமாக இருக்கிறதோ, அதை விட மோசமான நிலையில் தான் தமிழ்நாட்டின் நிதிநிலை உள்ளது. இமாச்சலப் பிரதேச அரசின் மொத்தக் கடன் ரூ.1 லட்சம் கோடி. அம்மாநில அரசின் நிதிநிலை அறிக்கை மதிப்பு ரூ.58,514 கோடி. நிதிநிலை அறிக்கை மதிப்பை விட கடனின் அளவு 170 % அதிகம் ஆகும். ஆனால், அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட 2026 27ம் ஆண்டுக்கான இடைக்கால நிதி நிலை அறிக்கையின் மதிப்பு ரூ.4 லட்சத்து 52,833.35 கோடி. அதே நேரத்தில் தமிழக அரசின் நேரடிக்கடன் ரூ.10 லட்சத்து 71,770 கோடி. அதாவது தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை மதிப்பை விட கடனின் அளவு 237 % அதிகம் ஆகும். நிதி நிலை அறிக்கை மதிப்பை விட 170 % அளவுக்கு கடன் கொண்ட இமாச்சலப் பிரதேச அரசே 30 % வரை ஊதியத்தை குறைக்க வேண்டியிருக்கும் நிலையில், நிதி நிலை அறிக்கை மதிப்பை விட 237 % கூடுதல் கடன் வைத்திருக்கும் தமிழகத்தின் நிலை என்னவாகும் ? என்பதை யோசித்தால் தெளிவு பிறக்கும்.

திமுக அரசு தொடர்ந்து மூடி மறைத்து வரும் ஓர் உண்மை என்னவென்றால், அரசு ஊழியர்களுக்கான ஊதியத்தையே கடன் வாங்கித் தான் வழங்கி வருகிறது என்பதைத் தான். ஒரு மாநில அரசு அதன் வருவாய் வரவுகளுக்குள் வருவாய் செலவுகளை கட்டுபடுத்துவது தான் சிறந்த நிதி மேலாண்மை ஆகும். 2025 26ம் ஆண்டில் தமிழக அரசின் மொத்த வருவாய் வரவுகள் 3,09,698 கோடி ஆகும். இதில் மானியங்களுக்கு ரூ.1,59,486.87 கோடி, வட்டி செலுத்த ரூ.70,753.99 கோடி, பிற நிலையான செலவுகளுக்கு ரூ.16,921.78 கோடி என 2,47,162.64 கோடியை செலவு செய்தது போக அரசிடம் ரூ.62,535 கோடி மட்டும் தான் மீதமிருக்கும்.

ஆனால், அரசு ஊழியர்களுக்கு ஊதியமாக ரூ.90,463.98 கோடி, ஓய்வூதியமாக ரூ.41,290.40 கோடி என ரூ.1,31,754.38 கோடி வழங்கப்பட வேண்டும். அரசிடம் ரூ.62,535 கோடி மட்டுமே உள்ள நிலையில், மீதமுள்ள தொகையை கடன் வாங்கித் தான் திமுக அரசு வழங்கியது. அதனால் தான் கடந்த ஆண்டில் ரூ.69,219 கோடி வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. திமுக ஆட்சியின் 5 ஆண்டுகளிலும் இது தான் நடந்திருக்கிறது. அதனால் தான் திமுக ஆட்சியில் தமிழகத்தின் நேரடிக் கடன் ரூ.9,52,374 கோடியாக அதிகரித்திருக்கிறது.

இந்த அவல நிலைக்கு காரணம் திமுக அரசின் மோசமான நிதி மேலாண்மை தான். திமுக அரசைப் பொறுத்த வரை ஊழல் செய்வதில் அலிபாபாவும் 40 திருடர்களைப் போலவும், நிர்வாகம் செய்வதில் பரமார்த்த குருவும் அவரது சீடர்களைப் போலவும் செயல்பட்டு வருகிறது. அதனால் தான் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு இந்தியாவிலேயே அதிக கடன் வாங்கும் மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. இதே நிலை நீடித்தால் அடுத்த சில ஆண்டுகளில் தமிழ்நாட்டிலும் அரசு ஊழியர்களின் மாத ஊதியத்தை 30 % முதல் 50 % வரை குறைக்க வேண்டியிருக்கும்.

இந்த நிலை மாற வேண்டும் என்றால், அரசின் வருவாயைப் பெருக்கி, தேவையற்ற செலவுகளை குறைக்க வேண்டும். நிர்வாகத் திறன் இல்லாத திமுக அரசால் அதை செய்ய முடியாது. இதை நன்கு உணர்ந்திருக்கும் தமிழ்நாட்டு மக்கள் வரும் தேர்தலில் திமுகவை வீட்டுக்கு அனுப்புவார்கள். அதன் பின்னர் அமையவுள்ள புதிய அரசில் தமிழ்நாட்டின் நிதி நிலையை மேம்படுத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று அன்புமணி கூறியுள்ளார்.

## புதுச்சேரி : தவெக உடன் கூட்டணி சேர்ந்த ‘நேயம் மக்கள் கழக’த்துக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு

சென்னை: மார்ச்.24-

புதுச்சேரியில் கூட்டணி கட்சியான நேயம் மக்கள் கழகத்திற்கு "உருளையன்பேட்டை" மற்றும் "தட்டாஞ்சாவடி" ஆகிய 2 தொகுதிகள், ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழக வெற்றிக் கழகம் அறிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘புதுச்சேரி மாநிலத்தில் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 30 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், புதுச்சேரி மாநில வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, "நேயம் மக்கள் கழகம்" நிறுவனத் தலைவர் நேரு (எ) குப்புசாமி விலிகி, தமிழக வெற்றிக் கழகத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள 30 சட்டமன்றத் தொகுதிகளில் "உருளையன்பேட்டை" மற்றும் "தட்டாஞ்சாவடி" ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகள், கூட்டணியில் சேர்ந்துள்ள நேயம் மக்கள் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்பதை வெற்றித் தலைவர் ஒப்புதலோடு தெரிவித்துக் கொள்கிறோம்’’ என்று என்.ஆனந்த் கூறியுள்ளார்.

## புதுச்சேரியில் இண்டி கூட்டணிக்கு கூடுதல் தலைவலி; தேமுதிகவும் போட்டி என அறிவிப்பு

புதுச்சேரி: மார்ச்.24-

புதுச்சேரி இண்டி கூட்டணியில் திமுக, காங்., கம்யூ., வி.சி.க., கட்சிகளுக்குள் இருக்கும் பிரச்னைகளே இன்னும் தீராத நிலையில், தேமுதிகவும் போட்டியிடும் என்று பிரேமலதா அறிவித்தார்.

புதுச்சேரி சட்டசபை தேர்தல், அடுத்த மாதம் ஏப்ரல் 9ம் தேதி நடக்கவுள்ளது. என்ஆர் காங்கிரஸ் பாஜ இடையே தொகுதி பங்கீடு முடிவாகி உள்ளது. என்ஆர் காங்கிரஸ் 16, பாஜ 10, அதிமுக 2 லஜக 2 தொகுதிகளில் போட்டியிட இருக்கிறது. இன்றுடன் வேட்பு மனு தாக்கல் நிறைவு பெறும் சூழலிலும் இண்டி கூட்டணியில் தொகுதி பங்கீடு விவகாரம் முடிந்தபாடு இல்லை.

நீண்ட இழுபறிக்கு பிறகு இண்டி கூட்டணியில் தொகுதி பங்கீடு இறுதியானது. காங்கிரஸ் 16, திமுக12, விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு தலா ஒரு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆனாலும் முன்னாள் முதல்வர் நாராயணசாமிக்கு சீட் தர மறுக்கப்பட்டதாக கூறி, மாநில தலைவர் வைத்திலிங்கம் வீட்டு வாசலில் காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு தொகுதி மட்டுமே ஒதுக்க, திமுக, காங்கிரஸ் கட்சிகள் முடிவு செய்திருந்த நிலையில், 2 தொகுதிகளில் அந்த கட்சி வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இண்டி கூட்டணியில் திமுக, காங்., கம்யூ., வி.சி.க., கட்சிகளுக்குள் இருக்கும் பிரச்னைகளே இன்னும் தீராத நிலையில், தேமுதிகவும் போட்டியிடும் என்று பிரேமலதா அறிவித்து இருக்கிறார்.

இந்த முடிவை கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை பிறகு பிரேமலதா எடுத்துள்ளார். இது குறித்து நிருபர்களிடம் பிரேமலதா கூறியதாவது: புதுச்சேரி சட்டசபை தேர்தலில் தேமுதிக போட்டியிடுகிறது. தேமுதிகவினர் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளனர். திமுக, காங்கிரஸ் கூட்டணியில் தான் புதுச்சேரியில் தேமுதிக போட்டியிட உள்ளது. தேமுதிக சார்பில் யார் போட்டி என்பது மாலை 3 மணிக்கு தெரிய வரும், என்றார்.



# நீலகிரி மாவட்ட திமுகநகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம்

நீலகிரி, மார்ச். 24-

நீலகிரி மாவட்ட திமுக நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மாவட்ட அவை தலைவர் போஜன், துணை செயலாளர் ரவிகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் திராவிடமணி, தம்பி இஸ்மாயில், நகர செயலாளர்கள் ஜார்ஜ், , இளஞ்செழியன், சேகரன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், காமராஜ், , பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, ராஜா, சுஜேஷ், ஜெகதீசன், உத்தமன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், சஞ் சீவ்குமார், ரமேஷ்குமார், சின்னவர், சுப்ரமணி, மார்டின், வழக்கறிஞர் குயிலரசன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# பாடியநல்லூர் முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி ஆலயத்தில் மண்டலாபிஷேகம் பூர்த்தி விழா



மாதவரம், மார்ச். 24-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பர்மா நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி ஆலயத்தில் மண்டலாபிஷேகம் பூர்த்தி விழா ஆலய அறங்காவலர்க்குழு தலைவர் மீ.வே. கருணாகரன், எஸ்.கர்ணாகரன், வீரம்மாள், ஞானம், ராமு, ஆலய விழா குழு நிர்வாகிகள் தலைவர் புண்ணியசேகர்,செயலாளர் சன் முனியாண்டி , பொருலாளர் ஞானப்பா, ஆலய அன்னதான குழு நிர்வாகிகள் அர்ஜுனன், ஞானசேகரன், பார்த்திபன் உள்ளிட்ட பொறுப்பாளர்கள், கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் யஜமான சங்கல்பம், விக்னேஷ்வரபூஜை, புண்யாஹவாசனம்,108 கலச பூஜை, 108 சங்காபிஷேகம் பூஜை, மஹா பூர்ணாஹீதி போன்ற சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் கைலாய வாத்தியங்கள் முழங்க மேளதாளத்துடன் கலசங்களை ஆலய மாடவீதி உலா சென்று அருள்மிகு அங்காள ஈஸ்வரி அம்மனுக்கு 108 புனிதநீர் கலச அபிஷேகம் மற்றும் முனீஸ்வரர் சுவாமிக்கு 108 சங்காபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து சுவாமிகளுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உட்பட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



# ரெட்டைஏரி லட்சுமிபுரத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

மாதவரம், மார்ச். 24-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மாதவரம் மேற்கு பகுதி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் அதிமுக பகுதி செயலாளர் வேலாயுதம் தலைமையில் ரெட்டை ஏரி இலட்சுமிபுரம் ஜிபிஎல் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளரும் முன்னாள் பால்வளத்துறை அமைச்சருமான மாதவரம் வி.மூர்த்தி கலந்து கொண்டு எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக பதவி வகித்த போது மாதவரம் தொகுதிக்கு செய்த பணிகள் குறித்து எடுத்துரைத்து ஆலோசனைகள் கூறி சிறப்புரையாற்றினார். இதில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் இன்பராஜ், எழில், இ.சேட்டு, கருப்புக் கொடி ஏழுமலை, பாஜக சென்னை சிவா, அருண்குமார், சசிதரன், பாமக சிவப்பிரகாசம், சண்முகம், ராஜேந்திரன், அமமுக வேதாச்சலம், குட்வில் குமார், முத்துராமலிங்கம், ரோலக்ஸ் ரவிகுமார், தமாகா நிசாந்த், ஏசுகாந்த், மணி, கௌதம், மதன்குமார் உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் அனைத்து நிலை பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா பள்ளியில் ரம்ஜான் பண்டிகை கொண்டாட்டம்



மாதவரம், மார்ச். 24-

மாதவரம் தொகுதி செங்குன்றம் பஜாரில் அமைந்துள்ள மஸ்ஜிதே ஆயிஷா பள்ளியில் ரம்ஜான் பண்டிகை சிறப்புத் தொழுகை மஸ்ஜிதே ஆயிஷா தலைமை இமாம் மௌலவி முனைவர் காஜாமுயீனுத்தீன் ஜமாலி தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. துணை இமாம் மௌலவி அபுல்ஹசன்பிலாலி அனைவரையும் வரவேற்றார்.

மஸ்ஜிதே ஆயிஷா தலைவர் காஜா மொய்தீன், செயலாளர் அப்துல்லத்தீப், பொருளாளர் முகம்மது ஆஷிக்அலி, துணைத் தலைவர் அக்பர்பாஷா, துணைச் செயலாளர் நாகூர்ஹனிபா, மஸ்ஜிதே ஆயிஷா நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஜாகிர்உசேன், சேட்டு, அப்துல்வாஹித், ஷானவாஸ், சாகுல் அமீது, கலீல்ரஹ்மான் ஆகியோர் முன்னிலையில் செங்குன்றம் சுற்று வட்டாரத்தில் உள்ள சுமார் 1000த்திற்கு மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்களை வழங்கினர். இதில் ரம்ஜான் சிறப்புத் தொழுகையில் பள்ளி வாசல் பொறுப்பாளர்கள், ஜமாஅத்தார்கள் 1000த் திற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் சிறப்புத்தொழுகையில் பங்கு கொண்டனர்.சிறப்பு தொழுகை முடிந்த பின்னர் ஒருவருக் கொருவர் கட்டிப் பிடித்து தனது அன்பை வெளிப்படுத்தி கொண்டனர். தொழுகையில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி ஒருவருக்கொருவர் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டனர்.

மேலும் மௌலவி முனைவர் காஜாமுயீனுத் தீன் ஜமாலி சிறப்பு பிரார்த்தனையில் இறைவனிடம் வேண்டும்பொழுது, இவ்வுலக மக்கள் நலமுடனும் வளமுடனும் வாழவும், சண்டை சச்சரவுகள் இல்லாமல் மதநல்லிணக்கத்தோடு வாழ வேண்டும் எனவும் இந்தியாவில் எல்லா மக்களும் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழவும், எல்லா வளமும் பெற்று நோய் நொடி இல்லா வாழ்வும் ஏழை எளிய மக்களுக்கு தங்களால் முடிந்த தர்மத்தை வழங்க வேண்டு மென்றும் பிரார்த்தித்தார்.

# தாம்பரம் பெரிய ஜூம் ஆ பள்ளிவாசல இஸ்லாமியர்களின் புனித பண்டிகையான ரம்ஜான் பண்டிகையொட்டி ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிறப்பு தொழுகை





தாம்பரம் மார்ச். 24-

நாடு முழுவதும் இன்று ரம்ஜான் பண்டிகை வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது அதன் வகையில் செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரத்திற்கு உட்பட்ட பல்வேறு பள்ளிவாசல்களிலும் ரமலான் சிறப்பு தொழுகை காலை முதல் நடைப்பெற்று வருகிறது. அதன்படி தாம்பரம் சண்முகம் சாலையில் உள்ள பெரிய ஜிம்ஆ பள்ளிவாசலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமிய பெண்கள், ஆண்கள் சிறப்பு தொழுகையில் பங்கேற்றனர்.

பெருநாள் தொழுகைக்கு பின்பு ஒருவருக்கொருவர் கட்டி தழுவி ரமலான் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

ஆண்கள், பெண்கள் என திரளானோர் சிறப்பு தொழுகையில் கலந்து கொண்டனர்.

தொழுகை முடிந்த்து மனித்நேய மக்கள் கட்சி மாநில துணை பொதுசெயலாளர் தாம்பரம் யாக்கூப் செய்தியாளர்களிடம் கூறும்போது, 30 நாட்கள் நோன்பு இருந்து இன்று பெருநாள் பண்டிகையை இஸ்லாமியர்கள் மகிழ்ச்சியாக கொண்டாடி வருகின்றனர். இந்த நன்நாளில் உலக முழுவதும் வெறுப்பு பிரச்சாங்கள் அகற்றி அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழவும், போர் உள்ளிட்ட சண்டை சச்சரவுகள் நீங்கி உலக அமைதி பெறவும் பிராத்த்னை செய்வதாகவும் தெரிவித்தார்.





# மறைமலை நகரில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட வியாபாரிகள் சங்க ஆலோசனைக் கூட்டம்

செங்கல்பட்டு மார்ச் 24-

செங்கல்பட்டு வடக்கு மாவட்ட அனைத்து வியாபாரிகள் சங்க பொதுக் குழு கூட்டம் மறை மலை நகர் ஜே.பி.பேலஸ் மஹாலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செங்கல்பட்டு வடக்கு மாவட்ட வியாபாரிகள் சங்க தலைவர் எம். இந்திரஜித் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் மறைமலை நகர் நகர வியாபாரிகள் சங்க தலைவர் ஏ.ஜெயக்குமார் அனைவரையும் வரவேற்றார்

கூட்டத்தில் சங்க மாவட்ட, நகர முக்கிய நிர்வாகிகள் பி.அல்லி முத்து, துரைராஜ், ஏ.ரமேஷ், அய்யாசாமி, ஜி.குமார், பாலமுருகன், கே.காலேஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலைவர்

ஏ.எம்.விக்ரமராஜா கலந்துகொண்டு வருகிற மே மாதம் நடைபெற உள்ள வணிகர் சங்க மாநாடு குறித்தும், வணிகர் சங்க நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, சிறு பெண் வியாபாரிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் மண்ணிவாக்கம் சங்க நிர்வாகிகள் மாவட்ட துணை தலைவர் இரா.ஆனந்தராஜ், மாவட்ட இணை செயலாளர் ஜே.கருணாகரன், மாவட்ட நகர பேரூர் சங்க நிர்வாகிகள் உத்திரகுமார், பி.லிங்கன், ஆரோக்கிய ராஜன், மாணிக்க ராஜா, லோகேஸ்வரன், மன்சூர் அலி, எஸ்.சத்யநாராயணன், ராஜாமணி, சக்தி சந்திரசேகர், ஆர்.தேவராஜன், டி.குமார், சி.பாலமுருகன், மன்ராஜ் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அதிமுக மாணவரணி துணை செயலாளர் கே.ஆர். கோபி அக்கட்சியில் இருந்து விலகி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம் எல் ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தார்.இந்நிகழ்வில் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி,அதிமுக முன்னாள் ஒன்றிய செயலாளர் கோவிந்தராஜ் உட்பட பல திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# கிருஷ்ணகிரி மேற்கு நகர திமுக தேர்தல் ஆலோசனை கூட்டம் அதிக வாக்குகள் பெற ஒற்றுமையாக செயல்பட உறுதிமொழி



கிருஷ்ணகிரி, மார்ச் . 24-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ அவர்களின் ஆலோசனையின் படி, கிருஷ்ணகிரி மேற்கு நகர திமுக சார்பில் தேர்தல் ஆலோசனை கூட்டம் மேற்கு நகர செயலாளர் அஸ்லாம் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக, கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதனை முகவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கு வழங்கினர். மேலும், அந்தப் பகுதிகளில் வாக்காளர்களை நேரடியாக சந்தித்து அவர்களுடன் உறவு வலுப்படுத்தும் பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அதேபோல், வாக்குச்சாவடி வாரியாக பொறுப்பாளர்கள் நியமனம், வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு, வாக்குச்சாவடி மேலாண்மை உள்ளிட்ட தேர்தல் தொடர்பான பணிகளை திட்டமிட்ட முறையில் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட நிர்வாகிகள் அனைவரும் வரவிருக்கும் தேர்தலில் ஒற்றுமையுடன் செயல்பட்டு, கழகத்திற்கு அதிக வாக்குகள் பெற்றுத் தர உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த கூட்டத்தில் வார்டு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பல்வேறு நிலை பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டு தேர்தல் பணிகளை சிறப்பாக முன்னெடுக்க உறுதி தெரிவித்தனர்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 முன்னிட்டு, சட்டம் ஒழுங்கு தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், தலைமையில் தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அருகில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.பிரதீப் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெயபாரதி உட்பட பலர் உள்ளனர்.



# கால்வேஅள்ளி கிராமத்தில்திமுக சார்பில் பூத்கமிட்டிநிர்வாகிகள்ஆலோசனை கூட்டம்

கிருஷ்ணகிரி,மார்ச். 24-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் கால்வே அள்ளி கிராமத்தில் திமுக சார்பில் மாவட்ட செயலாளர்

பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் அவர்களின் ஆலோசனையின் பேரில் ஒன்றிய செயலாளர் மேற்கு ஒன்றிய கழக சரவணன் தலைமையில் சட்டமன்ற தேர்தலையொட்டி பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைப்பெற்றது. மாவட்ட பிரதிநிதி நாகராஜ் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட கலை இலக்கிய பிரிவு துணை அமைப்பாளர் மோகன், கோவிந்தசாமி,

முன்னாள் ஊராட்மான்ற தலைவர் சின்னவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இக்கூட்டத்தில் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் பூத் கமிட்டி நிர்வாகிகள் எவ்வாறு செயல்பட வேண்டும், திமுக அரசின் சாதனைகளை வாக்காளர்களிடம் எடுத்து கூறி நூறு சதவித வாக்கு பதிவு செய்ய அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து பணியாற்றுவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. இக்கூட்டத்தில்முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சக்தி, சங்கர் மற்றும் நிர்வாகிகள் கோவிந்தராஜ்,கைலாஷ், சின்னராஜ், வேலு, வெங்கட்ராமன், பாஸ்கர் உள்ளிட்ட கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தானியங்கி சிக்னல் அமைக்கும் பணி நடைபெறுவதால் 13 ரயில்களின் சேவையில் மாற்றம்

சென்னை, மார்ச்.24-

ஜோலார்பேட்டை தொட்டம்பட்டி இடையே தானியங்கி சிக்னல் அமைக்கும் பணி நடை பெறுவதால், 13 ரயில்களின் சேவையில் நாளை மாற்றம் செய்யப்பட உள்ளது.



இதன்படி, அரக்கோணம் சேலத்துக்கு நாளை ( 24ம் தேதி) அதிகாலை 5.15 மணிக்கு இயக்கப்படும் மெமு விரைவு ரயில், சேலம் அரக்கோணத்துக்கு அதே நாளில் பிற்பகல் 3.30 மணிக்கு இயக்கப்படும் மெமு விரைவு ரயில், கோவை சென்னை சென்ட்ரலுக்கு அன்றைய தினம் காலை 6.20 மணிக்கு இயக்கப்படும் இன்டர்சிட்டி விரைவு ரயில், சென்னை சென்ட்ரல் கோவைக்கு பிற்பகல் 2.30 மணிக்கு இயக்கப்படும் இன்டர்சிட்டி விரைவு ரயில், ஈரோடு ஜோலார்பேட்டைக்கு அதே நாளில் காலை 6 மணிக்கு இயக்கப்படும் பாசஞ்சர் ரயில், ஜோலார்பேட்டை ஈரோடுக்கு பிற்பகல் 2.45 மணிக்கு இயக்கப்படும் பாசஞ்சர் ரயில் ஆகிய 6 ரயில்கள் ரத்து செய்யப்பட உள்ளன.

வந்தே பாரத் ரயில் தாமதம்

சென்னை சென்ட்ரல் கோவைக்கு நாளை மதியம் 2.15 மணிக்கு புறப்பட வேண்டிய வந்தே பாரத் ரயில், இரண்டு மணி நேரம் தாமதமாக மாலை 4.15 மணிக்கு புறப்படும்.

கோவை சென்னை சென்ட்ரலுக்கு நாளை பிற்பகல் 3.15 மணிக்கு புறப்பட வேண்டிய கோவை விரைவு ரயில், 2 மணி நேரம் தாமதமாக மாலை 5.15 மணிக்கு புறப்படும்.

இதுதவிர, 2 விரைவு ரயில்கள் ஒன்றரை மணி நேரம் இடையில் ஆங்காங்கே நின்று செல்லும். 3 ரயில்கள் மாற்றுப் பாதையில் இயக்கப்பட உள்ளன. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அண்ணாமலையார் கோயிலில் மீண்டும் பிரசாதம் விறகு அடுப்பை பயன்படுத்தி லட்டு தயாரிப்பு

திருவண்ணாமலை, மார்ச். 24-

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப்பட்ட இலவச லட்டு பிரசாதம் மீண்டும் வழங்கும் பணி தொடங்கியது.



அண்ணாமலையார் கோயிலுக்கு வணிக காஸ் சிலிண்டர் கிடைக்காததால் பிரசாதம் தயாரிக்க முடியாமல் இலவசமாகப் பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த லட்டு பிரசாதம் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று இந்து சமய அறநிலையத்துறையின் உத்தரவின்படி, கோயில் வளாகத்தில் இலவச லட்டு பிரசாதம் தொடர்ந்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டு, விறகு அடுப்பு மூலமாக லட்டு தயாரிக்கும் பணி நடைபெற்று, நேற்று காலை முதல் மீண்டும் பக்தர்களுக்கு இலவச லட்டு பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல் பிரசாத விற்பனை நிலையத்தில் புளி சாதம் மற்றும் சர்க்கரை பொங்கல் மட்டுமே பக்தர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

லட்டு, அதிரசம், முறுக்கு, மிளகு வடை ஆகியவை வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால் தயாரிக்க முடியாமல் நிறுத்தப்பட்டுள்ளது

# ஊத்தங்கரை வடக்கு ஒன்றியத்தில் திமுக தேர்தல் ஆலோசனை மற்றும் பூத் நிர்வாகிகள் சந்திப்பு

## கழக ஆக்கப் பணிகளை தீவிரப்படுத்த மதியழகன் எம்.எல்.ஏ வழிகாட்டல்

கிருஷ்ணகிரி, மார்ச். 24-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வடக்கு ஒன்றியத்தில் உள்ள வெங்கடதாம்பட்டி, படப்பள்ளி, உப்பாரப்பட்டி, கெங்கபிராம்பட்டு, காரப்பட்டு, கருமாண்டபதி, கதவணி, கீழ்மத்தூர், எக்கூர், மகனூர்பட்டி, கோவிந்தாபுரம், பெரியதள்ளப்பாடி, மூன்றாம் பட்டி, ரெட்டிப்பட்டி, கொண்டம்பட்டி உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கழக ஆக்கப் பணிகள் மற்றும் பூத் நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன், எம்.எல்.ஏ கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு முக்கிய ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில், ஒவ்வொரு பூத்திலும் வாக்காளர்களை நேரடியாக அணுகி, அவர்களுடன் உறவை வலுப்படுத்துதல், மேலும், பூத் வாரியாக பொறுப்பாளர்கள் சுறுசுறுப்பாக செயல்பட்டு, தேர்தல் நாளில் முழுமையான மேலாண்மை ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

அதேபோல், கழக ஆக்கப் பணிகளை வேகப்படுத்தி, அடிப்படை நிலை அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் வரவிருக்கும் தேர்தலில் அதிக வாக்குகள் பெற முடியும் எனவும் மதியழகன் எம்.எல்.ஏ அவர்கள் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட நிர்வாகிகள் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு, திமுக வெற்றிக்காக முழு மனதுடன் பாடுபட உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட பொருளாளர் கதிரவன், உள்ளிட்ட ஒன்றிய, ஊராட்சி, வார்டு நிலை கழக நிர்வாகிகள் மற்றும் பூத் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பழனிதிரு ஆவினாங்குடியில் பக்தர்கள் கோரிக்கை

பழனி மார்ச். 24-

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் முக்கிய உபகோயிலான திரு ஆவினாங்குடி திருத்தலத்திற்கு வந்த பக்தர்கள் சில கோரிக்கைகளை செய்தியாளர்கள் மத்தியில் முன் வைத்தனர் . இன்னும் ஒரு சில நாட்களில் பங்குனி உத்திரம் ஆரம்பமாக இருப்பதால் வெயிலின் தாக்கம் தரைப்பகுதி அதிக வெப்பமடைவதால், குறிப்பாக விளக்கேற்றும் பகுதிகளில் பக்தர்கள் மற்றும் குழந்தைகள் எதிர்கொள்ளும் சிரமத்தைக் குறைக்க பின்வரும் நடவடிக்கைகள் பயனுள்ளதாக இருக்கும் வெப்பம் தணிக்கும் விரிப்புகள் கூல் மேட்ச் பக்தர்கள் நடமாடும் பாதையிலும், குறிப்பாக விளக்கேற்றும் இடத்தைச் சுற்றிலும் தரையின்



வெப்பத்தை உள்வாங்காத வகையிலான தரை உடனடியாக அமைத்துத் தரும்படியும்

நிழற்பந்தல் அமைத்தல் பக்தர்கள் விளக்கேற்றும் பகுதியில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நிழற்பந்தல் அமைப்பது தரையின் வெப்பத்தை பெருமளவு குறைக்க உதவுமாறு மற்றும்

நீர் தெளிக்கும் வசதி நடைபாதையில் அவ்வப்போது நீர் தெளிப்பதன் மூலம் வெப்பத்தின் தாக்கத்தை ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடியும் மற்றும் 5000 க்கும் மேற்பட்ட பக்தர்கள் தினசரி வந்து செல்லும் ஒரு முக்கிய ஆன்மீகத் தலத்தில், அவர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகும் எனக் கூறினர்





■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் ரு 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை மாவட்ட மின்னனு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்களித்ததை உறுதி செய்யும் ஒப்புகைச் சீட்டுக் கருவி (VVPAT) ஆகியவற்றை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து அனுப்பிவைக்கப்பட்டு வரும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்ஆய்வு செய்தார்.



# கரூரில் கோயில் நிலங்களில் இருந்த தேர்தல் பணிமனைகள் அகற்றம்

கரூர், மார்ச். 24-

கரூரில் 2 இடங்களில் அமைக்கப்பட்டிருந்த தேர்தல் பணிமனைகள் அகற்றப்பட்டுள்ளன. கரூர் சட்டப்பேரவைத் தொகுதியில் பல்வேறு காலி இடங்களில் தகரக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வந்தன.

இதுகுறித்து பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை, கரூர் தொகுதியில் பல்வேறு இடங்களில் திமுக சார்பில் மனிதபட்டிகள் அமைக்கப்பட்டு வருவதாக குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பாக அதிமுக, பாஜக சார்பில் தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர், கரூரில் 100 இடங்களில் மனித பட்டிகள் அமைக்க திமுக திட்டமிட்டுள்ளது.

தற்போது 48 இடங்களில் மனித பட்டிகள் அமைக்கப்பட்டுள்ளதாக கரூர் ஆட்சியர்ரவிகுமாரிடம் மார்ச் 20ம் தேதி புகைப்படங்களுடன் புகார் அளித்தார். அப்போது, கோயில் நிலங்களிலும் மனித பட்டிகள் அமைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், கரூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், கோட்டாட்சியருமான ச.சுந்தரராமன் அறிவுறுத்தலின்பேரில், கரூர் காதப்பாறை மற்றும் வெண்ணெய்மலை ஆகிய இடங்களில் கோயில் நிலங்களில் தகரக் கொட்டகைகளில் அமைக்கப்பட்டிருந்த தேர்தல் பணிமனைகளை தொடர்புடையவர்களே நேற்று முன்தினம் அகற்றினர்.

# சுசூகி பர்க்மேன் ஸ்டிரீட் இஎக்ஸ்

சென்னை, மார்ச்.24-

சுசூகி மோட்டார் சைக்கிள்ஸ் நிறுவனம், புதிய மேம்படுத்தப்பட்ட பர்க்மேன் ஸ்டிரீட் இஎக்ஸ் மோட்டார் சைக்கிளை அறிமுகம் செய்துள்ளது. இதில் 124 சிசி சிங்கிள் சிலிண்டர் பெட்ரோல் இன்ஜின் இடம் பெற்றுள்ளது. இது அதிகபட்சமாக 6,500 ஆர்பிஎம்ல் 8.5 பிஎச்பி பவரையும், 5,500 ஆர்பிஎம்ல் 10 என்எம் டார்க்கையும் வெளிப்படுத்தும். புளூடூத் இணைப்புடன் கூடிய எல்சிடி இன்ஸ்ட்ரூமென்ட் கிளஸ்டர் உள்ளது. சுசூகி ரைட் கனெக்ட் மூலம் இணைத்துக் கொள்ளலாம். எல்இடி ஹெட் லாம்ப், டெயில் லாம்ப், முன்புற வைசர்கள், டூயல் டோன் சீட், சீட்டுக்கு அடியில் 21.5 லிட்டர் கொள்ளளவு வசதி உள்ளது. மெட்டாலிக் ராயல் பிரான்ஸ், மெட்டாலிக் மேட்டி பிளாக் வண்ணங்களில் கிடைக்கும். ஷோரூம் விலை சுமார் ரூ.1.08 லட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது

# பறவை காய்ச்சல் எதிரொலி தமிழகம் முழுவதும் நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரம்

சென்னை, மார்ச். 24-

அடையாறு பகுதியில் சமீபத்தில் இறந்த காகங்களை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்ததில், எச்5என்1 எனப்படும் பறவை காய்ச்சல் பாதிப்பு இருந்தது உறுதியானது.

இதையடுத்து, கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறு தமிழக தலைமை செயலருக்கு மத்திய அரசு அறிவுறுத்தியது. அதன்படி, தமிழக சுகாதாரத் துறை பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.





பறவை காய்ச்சலுக்குள்ளான கோழிகள், பிற பறவையினங்களிடம் இருந்து மனிதர்களுக்கு தொற்று பரவ வாய்ப்புள்ளது. அதன் கழிவுகளில் இருந்து மனிதர்களுக்கும் எளிதில் பாதிப்பு பரவக் கூடும்.

பாதிக்கப்பட்ட பறவையிடம் இருந்தோ, மனிதரிடம் இருந்தோ மற்றவர்களுக்கு, `வெஸ்ட் நைல் வைரஸ்' பாதிப்பை கொசுக்கள் கடத்தும் என்பதால், நோய்ப் பரவல் வாய்ப்பு அதிகம் உள்ளது.

அதனால், காய்ச்சல், தலைவலி, தசைப்பிடிப்பு, இருமல், மூச்சு திணறல் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுமாறு பொது சுகாதாரத்துறை தெரிவித்திருந்தது.

இதற்கிடையில், சென்னையை தொடர்ந்து, திருவள்ளூர், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் காகங்கள் உயிரிழந்தன. கிண்டி உயிரியல் பூங்காவில் பறவைகள் உயிரிழந்ததால், பூங்கா மூடப்பட்டது.

இது தொடர்பாக தமிழக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறுகையில், ``தமிழகத்தில் பறவை காய்ச்சலால் காகங்கள் உயிரிழந்தாலும், மற்ற பறவைகளுக்கோ, மனிதர்களுக்கோ பாதிப்பு கண்டறியப்படவில்லை. காகங்கள் உயிரிழப்பது தொடர்ந்து வருவதால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இறந்த பறவைகளை வெறும் கைகளால் அப்புறப்படுத்தக்கூடாது. அறிகுறிகள் இருந்தால், அலட்சியமாக இல்லாமல் உடனே மருத்துவரை அணுக வேண்டும். பறவை காய்ச்சலால் கோழிகள் பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது.

கோழி இறைச்சியை நன்கு வேக வைத்து சாப்பிட வேண்டும். தமிழகம் முழுவதும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரத் துறை எடுத்து வருகிறது. பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம்'' என்றனர்.

# காரைக்குடி அருகே ஈக்களால் ஒரு கிராமமே பாதிப்புதேர்தல் புறக்கணிப்பு பேனர் வைத்த மக்கள்




காரைக்குடி, மார்ச்.24-

காரைக்குடி அருகே ஈக்களால் ஒரு கிராமமே பாதிக்கப்பட்ட தால், தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அப்பகுதி மக்கள் பேனர் வைத்து எதிர்ப்பு தெரி வித்தனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே சிறுகப்பட்டி ஊராட்சி குளத்துவேல்பட்டியில் 70 குடும்பங்கள் வசிக்கின்றன. இக்கிராமம் அருகே 2 மாதங்க ளுக்கு முன்பு தனியார் கோழிப் பண்ணை அமைக்கப்பட்டது.

இந்தப் பண்ணையிலிருந்து ஏராளமான ஈக்கள் ஊருக்குள் பறந்து வருகின்றன. மேலும், அப்பகுதி முழுவதும் துர் நாற்றமும் வீசுகிறது. இதனால், அந்த கிராமமே கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சுகாதாரமற்ற முறையில் இயங்கும் அந்த கோழிப் பண்ணையை அகற்ற வலியுறுத்தி, அப்பகுதி மக்கள் தொடர்ந்து ஊரக வளர்ச்சி, வருவாய்த்துறை அதிகாரி களிடம் மனு அளித்தனர். ஆனால், நடவடிக்கை எடுக்கவில்லை.

தனியார் கோழிப் பண்ணையால் மொய்க்கும் ஈக்கள்


இதனால் அதிருப்தி அடைந்த கிராம மக்கள், வரும் சட்டப்பேரவைத் தேர்தலை புறக்கணிக்கப்போவதாக கிராமத்தில் பேனர் வைத்துள்ளனர். இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது: கோழிப் பண்ணையிலிருந்து அதி களவில் ஈக்கள் வருகின்றன.

அவை உணவுப் பொருட்களில் மொய்க்கின்றன. இதனால், நோய் பரவும் அபாயம் உள் ளது. துர்நாற்றம் கடுமையாக வீசுவதால், சுவாசிக்க முடியவில்லை. பண்ணையை அகற்ற பலமுறை மனு அளித்தும் நட வடிக்கை எடுக்கவில்லை. எனவே, தேர்தலை புறக்கணிக்க திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.




■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, தேர்தலில் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் 100% வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# "234 தொகுதிகளுக்கும் தவெகவுக்கு வேட்பாளர்கள் இருக்கிறார்களா?" குஷ்பு சந்தேகம்



புதுச்சேரி, மார்ச். 24-

"தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் போட்டியிட தவெகவுக்கு வேட்பாளர்கள் இருக்கிறார்களா என்பது சின்ன சந்தேகம்தான்" என தமிழக பாஜக மாநில துணைத் தலைவர் குஷ்பு விமர்சனம் செய்துள்ளார்.

புதுச்சேரியில் பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் ராமலிங்கம் ராஜ் பவன் தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிடுகிறார். அவர் தனது வேட்பு மனுவை மேரி ஹால் நகராட்சி கட்டிடத்தில் உள்ள தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகத்தில் இன்று தாக்கல் செய்தார். அவருடன் மத்திய அமைச்சர் மன்சுவ் மான்டியா, பாஜக தமிழக துணைத் தலைவர் குஷ்பு ஆகியோர் உடன் வந்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் குஷ்பு கூறியது: "இந்த தேர்தலிலும் என்டிஏ கூட்டணிதான் வெற்றி பெறும். புதுச்சேரியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக பாஜக ஆட்சியில் நல்ல வளர்ச்சி கொடுக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஆட்சிதான் தமிழகத்தில் நடக்கிறது. ஆனால் புதுச்சேரியில் பாதுகாப்பான ஆட்சி நடக்கிறது. பெண்களுக்காக பல திட்டங்களை இந்திய அரசு கொண்டு வந்தது. இதனால் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு புதுச்சேரியில் வெற்றி பெறும்" என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் விஜய்யின் தவெக தனித்து போட்டியிடுவது குறித்து கேட்டதற்கு, 'வாழ்த்துகள்தான் சொல்ல முடியும். 234 தொகுதிகளுக்கும் அவருக்கு வேட்பாளர்கள் இருக்கிறார்களா என்பது சின்ன சந்தேகம்தான்" என்று கூறினார்.

திமுகவுக்கும் தவெகவுக்கும் தான் தமிழகத்தில் போட்டி என விஜய் கூறியுள்ளாரே என கேட்டதற்கு, "என் வழியில் நான் தான் ராஜா என கூறிக் கொள்வதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது. அந்த உரிமை விஜய்க்கும் உள்ளது. ஆனால் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிதான் வெற்றி பெறப் போகிறது. எங்கள் கூட்டணி சார்பில் முதல்வராக எடப்பாடி பழனிசாமி அமர்வார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது" என தெரிவித்தார்.

'இந்த முறை தேர்தலில் போட்டியிடுகிறீர்களா?' என்று கேட்டதற்கு, 'கட்சிக்காக வேலை செய்கிறோம். கட்சி சொல்வதைத் தான் கேட்போம்' என பதில் அளித்தார்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைந்தால் பாஜக ஆட்சியில் பங்கு கேட்குமா என்ற கேள்விக்கு, 'இதனை முடிவு செய்ய கட்சி மேலிட பொறுப்பாளர்கள் உள்ளனர்' என பதிலளித்தார்.

# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த உ.பி.யைச் சேர்ந்த விமானப் படை ஊழியர் கைது!



லக்னோ , மார்ச். 24-

பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த உ.பி.யைச் சேர்ந்த விமானப் படை ஊழியர் சுமித் குமார் கைது செய்யப்பட்டார். கடந்த 3 ஆண்டுகளாக திப்ருகார் விமானப்படை தளத்தில் பணிபுரிந்து பாகிஸ்தான் ராணுவத்திடம் இந்திய விமானப் படையின் ரகசியத் தகவல்களை கசியவிட்டுள்ளார். சுமித் குமாரின் குற்றச்செயலை கண்டறிந்து ராஜஸ்தான் புலனாய்வு போலீசார் கைது செய்தனர்

# ரயில் மீது கல் வீசுவோருக்கு எதிராக நடவடிக்கை சென்னை ரயில்வே கோட்டம் எச்சரிக்கை



சென்னை, மார்ச். 24-

ரயில்கள் மீது கல்வீசும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று, சென்னை ரயில்வே கோட்டம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்டம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு: சென்னை ரயில்வே கோட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில், ஓடும் ரயில்கள் மீது கல்வீசும் சம்பவங்கள் கண்டறியப்பட்டுள்ள நிலையில், இத்தகைய சட்டவிரோத செயல்கள் பயணிகளின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவதோடு, ரயில்வே ஊழியர்களுக்கு ஆபத்தையும், பொதுச் சொத்துகளுக்கு சேதத்தையும், ரயில் சேவையில் இடையூறுகளையும் ஏற்படுத்துகின்றன.

ரயில்கள் மீது கல்வீசுவது ஒரு கடுமையான குற்றமாகும். ஓடும் ரயிலின் மீது வீசப்படும் கற்கள் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து, உள்ளே இருக்கும் பயணிகள், குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்குப் பெரிய காயங்களையும், நிரந்தர உடல் பாதிப்புகளையும் ஏற்படுத்தக் கூடும்.

மேலும், இத்தகைய சம்பவங்கள் பயணிகளிடையே தேவையற்ற அச்சத்தையும், மன உளைச்சலையும் உண்டாக்குகின்றன. ரயில்வே சட்டம், 1989ன் கீழ் ரயில்கள் மீது கல்வீசுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ரயில் தண்டவாளங்களுக்கு அருகே வசிக்கும் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், இத்தகைய செயல்களால் ஏற்படும் விளைவுகள் குறித்து சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி அறிவுரை வழங்க வேண்டும். இத்தகைய அசம்பாவிதங்களைத் தடுக்க சமூகத்தின் பங்களிப்பு மிகவும் அவசியமாகும்.

ரயில் தண்டவாளங்களுக்கு அருகே சந்தேகத்துக்கிடமான செயல்கள் ஏதேனும் நடந்தால், பொது மக்கள், பயணிகள் உடனடியாக ரயில்வே உதவி எண் 139க்குத் தகவல் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் தீர்ப்பு





மதுரை, மார்ச. 24-

தமிழகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய சாத்தான்குளம் தந்தை, மகன் காவல் நிலைய மரண வழக்கில் தீர்ப்பு வெளியாகிறது.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் ஜெயராஜ், இவரது மகன் பெனிக்ஸ். இவர்கள் செல்போன் கடை நடத்தி வந்தனர்.

கடந்த 2020 ஜூன் 19ல் கரோனா ஊரடங்கு நேரக் கட்டுப்பாட்டைத் தாண்டி கடையைத் திறந்து வைத்திருந்ததாகக் கூறி ஜெயராஜ், பெனிக்ஸ் ஆகிய இருவரையும் போலீஸார் விசாரணைக்காக சாத்தான்குளம் காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

அங்கு தந்தை, மகன் ஆகிய இருவரையும் போலீஸார் மிகக் கடுமையாகத் தாக்கினர். இதில் பலத்த காயமடைந்த நிலையில் முதலில் பெனிக்ஸ், பின்னர் ஜெயராஜ் ஆகிய இருவரும் அடுத்தடுத்து பரிதாபமாக உயிரிழந்தனர்.

தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கை உயர் நீதிமன்ற மதுரை அமர்வு சிபிஐ விசாரணைக்கு மாற்றியது.

இதையடுத்து சிபிஐ போலீஸார் கொலை வழக்குப் பதிவு செய்து சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பால கிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமைக் காவலர்கள் முருகன், காவலர்கள் முத்து ராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயில் முத்து உள்ளிட்ட 9 பேரை கைது செய்து மதுரை மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் கடந்த 5 ஆண்டுகளாக விசாரணையில் இருந்தது. சிபிஐ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து வழக்கின் விசாரணை தீவிரமாக நடைபெற்று வந்தது.

கைதான 9 பேரும் ஜாமீன் கோரி விசாரணை நீதிமன்றம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடியாயின. கைதான நாளிலிருந்து 9 பேரும் சிறையில் உள்ளனர்.

இந்த வழக்கின் விசாரணையை 6 மாதங்களில் முடிக்க உயர் நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டது. கால அவகாசம் முடிந்த நிலையில், மேலும் 6 மாதம் அவகாசம் கேட்டு விசாரணை நீதிமன்றம் தரப்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இதை விசாரித்த உயர் நீதிமன்றம் 3 மாதம் அவகாசம் வழங்கி கடந்தாண்டு நவம்பர் 26ல் உத்தரவிட்டது.

இதையடுத்து விசாரணை நீதிமன்றத்தில் விசாரணை சூடு பிடித்தது. தினமும் விசாரணை நடந்தது. இதுவரை அரசுத் தரப்பில் 52 சாட்சிகள், குற்றம் சாட்டப்பட்டோர் தரப்பில் 7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டன.

271 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. லத்தி உள்ளிட்ட 57 சாட்சியப் பொருட்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. விசாரணை முடிந்த நிலையில் தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்டது. இந்நிலையில் இந்த வழக்கில் மதுரை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது

# 9 ஆண்டுகளுக்கு பிறகு அதிமுக தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்தார் டிடிவி தினகரன்



சென்னை, மார்ச். 24-

9 ஆண்டுகளுக்குப் பிறகு டிடிவி தினகரன் அதிமுக அலுவலகம் சென்றுள்ளார். 2017 ஆகஸ்ட்டில் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட பிறகு அதிமுக தலைமை அலுவலகத்துக்கு டிடிவி தினகரன் சென்றதில்லை. சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக அலுவலகத்தில் சற்றுநேரத்தில் தொகுதி பங்கீடு உடன்பாடு கையெழுத்தாகிறது. இந்த நிலையில் தொகுதி பங்கீடு ஒப்பந்தத்தில் கையெழுத்திட டிடிவி தினகரன் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக அலுவலகத்திற்கு சென்றுள்ளார்.Urban Transit

தமிழ்நாட்டில் தலைமை என கூறும் அதிமுக அலுவலகத்தில் இதுவரை கூட்டணி பேச்சுவார்த்தை நடக்காததால் விமர்சனங்கள் எழுந்தது. எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்று பேச்சுவார்த்தை நடத்தியது கடும் விமர்சனத்துக்குள்ளானதால் அதிமுக அலுவலகம் வரும்படி பியூஸ் கோயலிடம் கேட்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனை அடுத்து பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக அலுவலகம் சென்றுள்ளார்.

சற்று நேரத்தில் தொகுதி பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ள நிலையில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி தலைவர்கள் அதிமுக தலைமை அலுவலகம் வந்துள்ளனர். பாஜகவுக்கு 29 தொகுதிகளும், பாமகவுக்கு 17 தொகுதிகளும், அமமுகவுக்கு 10 12 தொகுதிகளும், தமாகாவுக்கு 23 தொகுதி களும் ஒதுக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

2017ம் ஆண்டு அதிமுக துணைப் பொதுச் செயலாளராக எம்.ஜி.ஆர். மாளிகைக்கு சென்ற டிடிவி தினகரன் தற்போது அமமுக பொதுச்செயலாளராக வருகை தந்துள்ளார்

# எப்.15 போர் விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக ஈரான் அறிவிப்பு



டெஹ்ரான், மார்ச்.24-

கடந்த மார்ச் 1ம் தேதி அமெரிக்க விமானப்படையின் 3 எப்15 இ ரக போர் விமானங்களை குவைத்வான் பாதுகாப்பு ஆயுதங்கள் தவறுதலாக சுட்டு வீழ்த்தின.

சில நாட்களுக்கு முன்பு அமெரிக்க விமானப்படையின் அதி நவீன எப்35 போர் விமானத்தை தாக்கியதாக ஈரான் கூறியது. இந்த விமானம் அமெரிக்க விமானப்படை தளத்தில் அவசரமாக தரையிறங்கியதாக கூறப்பட்டது. இந்நிலையில் ஹார்முஸ் தீவு அருகே எதிரி நாட்டின் எப்15 ரக போர் விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக ஈரான் ஊடகம் ஒரு வீடியோவை பதிவேற்றம் செய்துள்ளது.

ஈரானின் வான் பாதுகாப்பு கருவிகள் மூலமாக இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈரான் ஊடகம் தெரிவித்து, அதற்கு ஆதாரமாக வீடியோ ஒன்றையும் பதிவேற்றம் செய்துள்ளது. ஆனால் இதை எந்த நாடும் உறுதி செய்யவில்லை. எப்15 ரக போர் விமானத்தை அமெரிக்கா தவிர சவுதி அரேபியா, இஸ்ரேல் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளும் வைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# சாம்சங் ஆலையில் மீண்டும் பணி வழங்க வலியுறுத்தி பேரணி சென்ற தொழிலாளர்கள் குடும்பத்துடன் கைது



சுங்குவார்சத்திரம், மார்ச். 24-

சாம்சங் ஆலையில் சஸ்பெண்ட் செய்யப்பட்ட 27 தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க வலியுறுத்தி, தலைமைச் செயலகம் நோக்கி பேரணி சென்ற 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குடும்பத்தினருடன் கைது செய்யப்பட்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரம் பகுதியில் சாம்சங் ஆலை இயங்கி வருகிறது. இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்துவரும் நிலையில், ஊதிய உயர்வு, தொழிற்சங்க அங்கீகாரம், போனஸ் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஆண்டு 800க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களில் சிஐடியு தொழிலாளர்கள் 27 பேரை சாம்சங் நிர்வாகம் பணியிடை நீக்கம் செய்தது. இதைத்தொடர்ந்து அரசு தரப்பில் பேச்சுவார்த்தை நடத்தி போராட்டத்தை கைவிட்ட, தொழிலாளர்கள் பணி செய்து வருகின்றனர்.

சஸ்பெண்ட் செய்யப்பட்ட 27 தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்கப்படும் என சட்டப் பேரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் வாக்குறுதி அளித்தார்.

ஆனால், பல மாதங்களைக் கடந்தும், சஸ்பெண்ட் செய்யப்பட்ட தொழிலாளர்களை சாம்சங் நிர்வாகம் பணியில் சேர்க்கவில்லை. இந்த விவகாரத்தில் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால், சிஐடியு மாநில துணைச் செயலாளர் முத்துக்குமார் தலைமையில் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், தங்களது குடும்பத்தினருடன் சுங்குவார்சத்திரம் காந்தி சிலை பகுதியிலிருந்து தலைமைச் செயலகம் நோக்கி நடைபயணம் புறப்பட்டனர்.

காவல் துறையினர் இதற்கு அனுமதி மறுத்ததையடுத்து, தடையை மீறி, குடும்பத்துடன் பேரணி புறப்பட்ட தொழிலாளர்களை கைது செய்ய முற்பட்டதால், சாலையில் அமர்ந்து போராட்டம் நடத்தினர். பின்னர், பேச்சுவார்த்தை நடத்தி தொழிலாளர்களை கைது செய்து தனியார் திருமண மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161